30th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் தவறுகள் ஏற்படுவதற்கில்லை. தங்கத்தை வாங்கிக்கொண்டு, உடனடியாக மதிப்பிட்டு பணம் கொடுப்பது என்பது இல்லை. யார் தங்கம் கொடுத்தார்கள், எங்கு கொடுத்தார்கள் முதலியவைகளையெல்லாம் பரிசீலனை செய்து தான் தங்கப் பத்திரம் வழங்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: தங்கப் பத்திரங்களுக்கு, திருப்பித் தரும்பொழுது தங்கம் கொடுக்கப்படுமா அல்லது பணமாகக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உயர்ந்தத் தங்கமாகக் கொடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த அறிக்கையை பார்க்கும் பொழுது தமிழ் நாட்டில் இருக்கிற தங்கத்தின் அளவுக்குப் பொருத்தமானதாக இதிலே உத்திரவாதம் தரப்பட்டதாகத் தெரியவில்லை. ஏராளமான கள்ளத் தங்கம் இருக்கிறது. கள்ளத் தங்கத்தை கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த சர்க்காரும், மத்திய சர்க்காரும் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினரிடம் ஏதாவது தகவல் இருந்தால் அதையும் கொடுத்தால், மேற்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

* 536 *கேள்வி.*—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் தங்கப்பத்திரத்தில் முதலீடு செய்யும் தங்கத்தை சென்னையிலேயே மதிப்பிடுவதற்கான வசதி செய்யும் படி மத்திய சர்க்காரிடம் கேட்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், என்ன பதில் கிடைத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) There are only two Government Mints in the Country handling this work. The Government of India have therefore stated that they cannot arrange assays in each State, since they do not propose to go to private agencies for this work.

* 537 *Q.*—SRI V. SANKARAN:
SRI K. CHEEMAICHAMY: } Will the Hon. the Chief Minister be pleased to state the total quantity of gold invested by the Temples, Churches and Mosques respectively in the State for Gold Bond?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: According to the information furnished by the District Collectors, 1,49,348 grammes

of gold have been invested by the Temples, Churches and Mosques as detailed below :—

		GRAMMES
Temples	... ...	1,44,908
Churches	... ...	2,453
Mosques	... ...	1,987
	Total ...	1,49,348

திரு. வை. சங்கரன் : இந்த விவரங்களைப் பார்த்தால், ஏதோ இந்த ராஜ்யத்தில் இந்துக்கள் மட்டும் தான் இருக்கிறார்கள் தற்காப்புக்காக, மற்றபடி முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் இதிலே பங்கு கொள்ளவில்லை, அவர்களுக்குப் பொறுப்பு இல்லை என்ற தவறான கருத்து ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே முஸ்லிம், கிருஸ்துவ கோவில்களுக்கும் இதை எடுத்துக் காட்டி, அதிகமாக வசூல் செய்வதற்கு என் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தகவல்படி கிறிஸ் தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்களுடைய அறநிலையங்களும் கொடுத்திருப்பதால், அம்மாதிரி தவறுதலான கருத்து ஒன்றும் ஏற்படாது.

திரு. கரு. சீமைச்சாமி : எச். ஆர். ஈ. ஆண்டு ஸி. போர்டு கோவில்களை கட்டாயப்படுத்தி இந்தத் தங்கம் வசூல் செய்யப் படுகிறது. அதே மாதிரி முஸ்லிம் கோவில்கள், சர்ச்சுகளுக்கும் ஏதாவது போர்டு இருக்கிறதா ? அவர்களையும் இம்மாதிரி வசூல் செய்யும்படி அரசாங்கம் ஏதாவது உத்தரவிட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது கனம் அங்கத் தினர் அவர்கள் கேட்பதிலிருந்து கட்டாயப்படுத்தி வசூலிக்க வேண்டும் என்று சொல்லுகிற மாதிரி இருக்கிறது. புகார் சொல்லு கிறார்கள், இஸ்லாமிய, கிருஸ்துவ கோவில்கள் ஏன் கட்டாயப் படுத்தப்படவில்லை என்று. கட்டாயப்படுத்தினதாக என்னிடம் தகவல் இல்லை. எந்தத் தர்மகர்த்தாவும் அந்தமாதிரி புகார் சொல்ல வில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் இருந்தால் அதைத் தெரிவிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கள்ளத் தங்கம் சம்பந்தமாக . .

MR. SPEAKER : The Hon. Member cannot put that question now as it does not relate to the main question. I am not allowing that question. Next question.

கோவை அரசினர் கலைக்கல்லூரி

* 538 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை அரசினர் கலைக் கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களிடமிருந்து